# வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No. 169/2024
## வழக்கு சாட்சி PW-9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர். செந்தில்சேகர் | தாலுகா | : | சங்கரன்கோவில் |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 22nd, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். அதே மருத்துவமனையில் கடந்த 29.05.2018 அன்று மாலை 06.15 மணியளவில் நான் பணியில் இருந்தபோது, பாம்புக்கோவில் சந்தையை சேர்ந்த 42 வயது மதிக்கத்தக்க திருமதி.ராஜேஸ்வரி, க/பெ.கருணாகரன் என்பவர் அவரது கணவரால் அழைத்து வரப்பெற்று என் முன் சிகிச்சைக்கு ஆஜரானார். நான்அவரை விசாரித்ததில், அதே நாளில் பாம்புக்கோவில் சந்தையில் காளிம்மன்கோவில் தெருவில் மேற்படி நபரின் வீட்டின் வாசலில் வைத்து அடையாளம் தெரிந்த ஆண் நபர் ஒருவர் மற்றும் அடையாளம் தெரிந்த பெண் ஒருவர் மாலை 05.15 மணியளவில் வெட்டியதால் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். நான் அவரை பரிசோதனை செய்து பார்த்தபோது, கீழ்க்கண்ட காயங்கள் அவருக்கு காணப்பட்டது.

(1). இடது முன்கையின் நடுப்பகுதியில் ஒரு சிதைவுக்காயம், 2 முன் கை எலும்புகளும் முறிந்து 10 x 10 x 5 cm அளவில் சதை வெளியே தெரியும் நிலையில் காணப்பட்டது.

(2). இடது முழங்கைக்கு சற்று கீழே ஒரு சிதைவுக்காயம் சதை வெளியே தெரியும் நிலையில் 10 x 8 cm அளவில் எலும்பு முறிவுடன் காணப்பட்டது.

(3). இடது தோள்பட்டைக்கு 7.5 செ.மீ க்கு கீழே 10 x 8 cm அளவில் ஒரு சிதைவுக்காயம் எலும்பு மற்றும் சதைகள் வெளியே தெரிந்த நிலையில் காணப்பட்டது. அதில் இடது கை எலும்பு முறிந்து காணப்பட்டது.

(4). வலது தோள்பட்டைக்கு சற்று கீழே ஒரு சிதைவு காயம் 10 x 10 cm அளவில் எலும்பு முறிவுடன் சதைகள் வெளியே தெரியும் நிலையில் காணப்பட்டது.

(5). வலது முழங்கையின் பின்பகுதியில் 10 x 8 x 8 cm அளவில் ஒரு சிதைவுக்காயம் எலும்பு முறிவுடன் காணப்பட்டது.

(6). வலது மணிக்கட்டுக்கு சற்று மேலே 10 x 8 cm அளவில் ஒரு சிதைவுக்காயம் முன் கை எலும்புகள் இரண்டும் முறிந்த நிலையில் காணப்பட்டது.

(7). வலது கையின் பின்பகுதியில் 4 x 3 x 3 cm அளவில் ஒரு சிதைவுக்காயம் காணப்பட்டது.

மேற்குரிய அனைத்து காயங்களிலும் தொடு வலி காணப்பட்டது. அவருக்கு முதலுதவி வழங்கப்பட்டு, எலும்பு முறிவு சிகிச்சை நிபுணரின்

சிறப்பு சிகிச்சை தேவைப்பட்டதால், திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைத்து அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவருக்கு மருத்துவர்.ஆதிநாராயணன் என்ற ரேடியாலாஜிஸ்ட் எக்ஸ்-ரே எடுத்துள்ளார். நுண்கதிர் ஆய்வில் 2 கைகளிலும் கியுமரஸ் எலும்பும், ரேடியஸ் மற்றும் Ulna எலும்புகளும் முறிந்து காணப்பட்டது. இதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் கொடுங்காயங்கள் என சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.8** ஆகும். காயச்சான்று **அ.சா.ஆ.9** ஆகும்.

அதே நாளில், மாலை 06.30 மணியளவில் பாம்புக்கோவில் சந்தையை சேர்ந்த 70 வயது மதிக்கத்தக்க திருமதி.வள்ளியம்மாள், க/பெ.தங்கவேல் என்பவரை அவரது மருமகன் கருணாகரன் என்பவரால் அழைத்து வரப்பெற்று என் முன் சிகிச்சைக்கு ஆஜரானார். அவரை விசாரித்ததில் ராஜேஷ்வரிக்கு ஏற்பட்ட விதத்திலேயே தனக்கும் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்து பார்த்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). முதுகின் வலதுபுறம் 15 x 3 x 3 செமீ அளவில் ஒரு சிதைவுக்காயம் காணப்பட்டது.

மேற்கூறிய காயத்தில் தொடு வலி காணப்பட்டது. அவருக்கு முதலுதவி வழங்கப்பட்டு அறுவை சிகிச்சை நிபுணரின் சிறப்பு சிகிச்சை தேவைப்பட்டதால், திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டார். ஆனால், அவர் அங்கு செல்லவில்லை. 16.10.2018 அன்று அவரை நேரில் பார்த்தபின் அவருக்கு ஏற்பட்ட காயம்

சாதாரண காயம் என காயச்சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று **அ.சா.ஆ.10** ஆகும்.

என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 அரிவாள் வைத்து தாக்கப்படும்போது, மேற்குரிய காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

காயச்சான்றிதழ் பெறும் போது என்னை போலீசார் விசாரித்தார். ஆய்வாளர் விசாரணையின் போது, நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்த விபரத்தை சொல்லியுள்ளேன். வாஸ்குலார் சம்பந்தப்பட்ட சிகிச்சை திருநெல்வேலியில் இல்லை என்றால் சரிதான். மேற்படி காயங்கள் வாள் வைத்து தாக்கப்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் ஒரு நபரை தாக்கும்போது மேற்கூரிய காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். பின்னால் நின்று ஒரு நபரை ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் வெட்டும்போது, காயம்பட்டவருக்கு அந்த காயங்கள் ஏற்பட வாய்புள்ளது என்றால் அரிதாக வாய்ப்புள்ளது.

காயத்தில் இரத்தப்போக்கு இருந்ததா? இல்லை உலர்ந்து இருந்ததா? என்று நான் குறிப்படவில்லை என்றால் சரிதான். காயத்தின் விளிம்புகள் வீக்கத்துடன் இருந்ததா? இரத்தம் உலர்ந்து இருந்ததா? என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

<u>3 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.22 17:11:58 +0530